TNVR140001162025

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

**முன்னிலை திருமதி. ப. சிவரஞ்ஜினி, B.Sc.,L.L.M.,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,

அருப்புக்கோட்டை.

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**அசல் வழக்கு எண்.96/2025**

----

1. கண்ணன்
2. பாக்கியலட்சுமி த/பெ.ஜெயராம்
3. துரைபாண்டி
4. வடிவேல்
5. விஜயமணி
6. பாக்கியலட்சுமி
7. கவிதா
8. ஹேமா --- வாதிகள்

/எதிர்/

1. சந்திரசேகரன்
2. சுப்புராஜ்
3. சார்பதிவாளர், திருச்சுழி
4. மாவட்ட ஆட்சியர், விருதுநகர் --- பிரதிவாதிகள்

இவ்வழக்கானது கடந்த 06.11.2025ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு. கடந்த 24.03.2026ம் தேதியன்று இந்த நீதிமன்றம் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.கார்க்கி செல்வம் அவர்கள் முன்னிலையாகியும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்ட நிலையிலும், 2ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட சம்மன் திருப்பப்பட்ட நிலையிலும், 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.C.தங்கப்பாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும் இருந்த நிலையில், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கிடும்...

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P

**<u>தீர்ப்புரை</u>**

(1) இவ்வழக்கின் தபசில் சொத்துக்கள் வாதிகளுக்கு தனித்து பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்து உத்தரவிடக்கோரியும், அதன்பின் தொடர்ச்சியாக தபசில் சொத்துக்களில் உள்ள வாதிகளின் அமைதியான அனுபவத்திற்கு 1, 2ம் பிரதிவாதிகளோ அவர்களது வகை ஆட்களோ எக்காலத்திலும் எவ்வித இடையூறும் செய்யக் கூடாது என தடை செய்யும் பொருட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடக் கோரியும்,

(2) இவ்வழக்கின் தபசில் 2ம் இலக்க சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ள கடந்த 19.07.2002ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (திருச்சுழி சார்பதிவக ஆவண எண்.884/2002) சட்டப்படி செல்லாது என்று விளம்புகை செய்து உத்தரவிடக்கோரியும்,

(3) இவ்வழக்கின் தபசில் 2வது இலக்க சொத்தை பொறுத்து 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்துள்ள கடந்த 29.07.2003ம் தேதியிட்ட கிரைய ஆவணம் (திருச்சுழி சார்பதிவக ஆவண எண்.936/2003) சட்டப்படி செல்லாது என்று விளம்புகை செய்து உத்தரவிடக் கோரியும்,

(4) இந்த வழக்கின் செலவுத் தொகையை வாதிகளுக்கு, பிரதிவாதிகளைக் கொடுக்கச்சொல்லி உத்தரவிடக்கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Plaintiff Counsel present. Steps to D1 not filed. This case has been pending for taking steps to D1 from 05.01.2026. This Court has given sufficient opportunity to plaintiff to take steps to D1 even one time with conditional order NFA. Despite sufficient opportunities given, the steps to D1 not taken. Hence this Court dismissed this suit for default.

SIVARANJINI P

Digitally signed by SIVARANJINI P

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

SIVARANJINI P Digitally signed by SIVARANJINI P

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அருப்புக்கோட்டை.**

------------------------------------
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
அருப்புக்கோட்டை.
அ.வ.எண்.96/2025
சீரான/வரைவுத் தீர்ப்புரை
நாள் – 24.03.2026
------------------------------------